| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயர்துளி | | |
|---|---|---|
| மழைத்துளி சேமிப்பீர் | | குடிநீரை பெருக்குவீர் |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற 28.04.2023 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும். தவறாது கலந்து கொள்ளும்படி உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.459**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.460**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் மார்ச் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.461**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் மார்ச் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.462**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 9 பள்ளிகளின் கழிப்பறைகளின் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாக தூய்மை பணிகளை மேற்கொள்ள தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை (ஒரு மேற்பார்வையாளர் உட்பட) வெளிப்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் விநியோகம் செய்யும் பணிக்கு 28.03.2023 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் தொகை ரூபாயில்.) |
|---|---|---|
| 1. | AR ES PE INFRA PRIVATE LIMITED<br>304,SPRING FIELD APRTMENT,<br>P N PUDHUR, COIMBATORE–641041 | ரூ. 632/– |
| 2. | SS ENGINEERS<br>3/6,KAMADHENU NAGAR,<br>VADAVALLI,<br>COIMBATORE–641041 | ரூ. 630/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள S.S.ENGINEERRS, 3/6, KAMADHENU NAGAR, VADAVALLI, COIMBATORE-641041. அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 0372/2023/எச் 1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக** குறிப்பு 1. **அனுமதிக்கப்பட்டது**

2. **ஏற்றுக்கொள்ளப்பட்டது, மன்றத்தீர்மான எண்.463**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு ஏ, வீரபாண்டி கிராமம், பிளாக் 1, நகரளவை எண்.87/1பி,1ஏ,(pt)(Old s.F.No.96), ஏரீஸ் நகர், சாய் அபிராமி நகர் எக்ஸ்டென்சன் என்ற இடத்தில் சாக்கடை வசதி ஏற்படுத்தி தர கோரி நகராட்சிக்கு உத்தரவிடுமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP.NO.8436/2023 இன் படி திருமதி.ஆர்.விஜய சாமூண்டீஸ்வரி மற்றும் திரு.ஜி.நடராஜன் ஆகியோரால் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு தலைமை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை செயலாளர், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கின் AFFIDAVIT நீதிமன்ற உறுதிமொழி ஆவணம் 18.03.2023 இணையதள வழியாக திரு.பி.ஆனந்த் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரால் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகளின் சார்பாகவும் மற்றும் இந்நகராட்சியின் சார்பாகவும் எதிர் வழக்காட திரு.பி.ஆனந்த் அவர்களை நியமனம் செய்து வக்காளத்து மற்றும் எதிர்வாதுரை தயார் செய்யும் பொருட்டு பத்திவாரி அறிக்கை அனுப்பியதற்கும் மேற்படி வழக்கிற்காகும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.20000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.625/2023/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.464**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2021-2022 மற்றும் 2022-2023ம் ஆண்டு திட்ட பணிகளின் விவரம் குறித்து தினகரன் நாளிதழில் 21.03.2023 ம் தேதியன்று விளம்பரம் செய்த வகையில் செலவு தொகை ரூ.21,420/- னை வழங்க கோரி Kal Publications (p) Ltd Coimbatore அவர்களிடமிருந்து பில் பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, அத்தொகையினை நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2021-2022 மற்றும் 2022-2023 ம் ஆண்டு திட்டப்பணிகளின் விவரம்

| வ.எண் | பணிகளின் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | மொத்தம் ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022-2023 | 98 | 692.00 |
| 2 | சட்டமன்ற உறுப்பனர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023 | 28 | 64.50 |
| 3 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 | 5 | 536.00 |
| 4 | தூய்மை பாரத திட்டம் (SBM நகர்ப்புறம்) 2021 - 2022 மற்றும் 2022-2023 | 3 | 186.28 |
| 5 | நமக்கு நாமே திட்டம் 2021-2022 மற்றும் 2022-2023 | 6 | 236.36 |
| | மொத்தம் | 140 | 1715.14 |

**அலுவலகக்குறிப்பு :-** 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2.நகர்மன்ற தலைவைர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்காண் செலவின தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.465**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-2024ஆண்டிற்கு ரூ.159.00 இலட்சத்தில் இரண்டு பூங்காக்கள் மேம்படுத்த மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் கீழ்க்கண்ட பணிகளுக்கு முழு மானியமாக நிதி வழங்கவும் மற்றும் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

பணிகளின் விவரம்

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சம்) |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட அங்காளம்மன் நகர் வார்டு பி, பிளாக் 12, T.S.No.7P,10P,34P.35 பூங்கா அமைத்தல் பணி | 65.00 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட கணபதி நகர் வார்டு பி, பிளாக் 1, T.S.No.27 Pt பகுதியில் பூங்கா அமைத்தல் | 94.00 |
| | மொத்தம் | 159.00 |

(ந.க.எண்.430/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** :- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணி திட்ட பணியாக உள்ளதால் மேற்படி பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.466**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு D, பிளாக் - 3, நகரளவை எண்.24/2, 24/3, 24/4 மற்றும் 24/5 பாரியூர் ரோடு பகுதியில் உள்ள இடத்தில் மேற்காணும் நான்கு சர்வே எண்களுக்கு மத்தியில் பொதுவான நடைபாதை 30 அடி அகலம் 265 அடி நீளம் ஆக மொத்தம் 7950 சதுரடி பொது வழி அமைந்துள்ளது என்றும் இதில் 24/4, 24/5 ஆகிய எண்கள் நகர் ஊரமைப்புத்துறையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆகையால் தற்போது இப்பாதையினை நகராட்சிக்கு ஒப்படைப்பதாக திருமதி.பார்வதியம்மாள், A.குழந்தைசாமி, K.நிர்மலாதேவி மற்றும் C.பொன்னுச்சாமி ஆகியோரால் ஆவண எண்.554/1993, 1054/2001, 393/2019 மற்றும் 2024/2022 ஆகிய ஆவணங்களுடன் 23.03.2023 இல் மனுதாரர்களால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில், வார்டு D, பிளாக் - 3, நகரளவை எண்.24/4, 24/5, இல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களது கடிதம் ந.க.எண்.2318/2020/ஈமா2 நாள்.13.10.2021 இல் SPFW-113/2021/ ED இன் படி ஒப்புதல் அளிக்கப்பட்ட தனிமனையில் அமைகிறது. ஆதலால் மேற்படி இடத்தில் 30 அடி அகலம் 265 அடி நீளம் ஆக மொத்தம் 7950 சதுரடி பொதுவழிப்பாதைக்கான இடத்தினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யக் கோரிய மனுதாரர்களின் கோரிக்கையினை ஏற்று நகராட்சி தானமாக பெற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.(ந,க.எண்.683/2023/எப்1)

**அலுவலக்குறிப்பு::-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.467**

10. இவ்வலுவலகத்திற்கும் மற்றும் ஆணையாளர் குடியிருப்புக்கும் தினசரி நாளிதழ்கள் 2023–2024 ஆம் ஆண்டிற்கு வாங்கிக் கொள்ளவும் அதற்குரிய உத்தேச செலவித்தொகை ரூ.1,00,000/–ஐ பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு::–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.468**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.19, கருமாயா எக்ஸ்டென்சன் என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி.கலையரசி ஆகிய தாங்கள் தமது கட்டிடத்தில் கட்டிட அனுமதி தொடர்பாக நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை, ஆணையர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆகியோரை முதல் மற்றும் 2 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு மேற்காணும் அலுவலர்களுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தல் WP.NO.18968/2016 இன்படி வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் பார்வை 2இல் கண்டவாறு 25.01.2023 இல் சென்னை உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாணை பெற்றுத்தந்தமைக்கு வழக்குக்கட்டணம் ரூ.18000/– வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீனிவாஸ் அவர்களால் 14.02.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்குக்கட்டணம் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந,க.எண்.1686/2016/எப்1)
**அலுவலக்குறிப்பு::–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.469**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–11, திருநகர் குடியிருப்பு பகுதியில் 1272 சதுர மீட்டர் இடமானது குழந்தைகள் விளையாடுமிடம், மேல்நிலைத்தொட்டி, கிணறு மற்றும் கோவில் ஆகியவற்றிற்காக ம.வ/நகர் ஊரமைப்பு இயக்குநர் எண்.1050/89 இன் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது இடத்தில் திருநகர் குடியிருப்பு வாசிகள் குழந்தைகள் விளையாடுவதற்கான அனைத்து உபகரணங்களுடன் கூடிய விளையாடுமிடம் அமைத்து பராமரிப்பதற்கும், சிதிலமடைந்த கோவிலையும் தங்களது செலவில் புனரமைக்கவும் 18.03.2023 ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் திருநகர் குடியிருப்பு வாசிகளால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்படி பொது ஒதுக்கீடு இடத்தில் குழந்தைகள் விளையாடுமிடத்தில் விளையாட்டு உபகரணங்கள் அமைத்து பராமரிக்கவும், 1272 சதுர மீட்டர் பொது ஒதுக்கீடு இடத்தை சுற்றி கம்பி வேலி அமைத்து பராமரிக்கவும், அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.626/2023/எப்1)
**அலுவலக்குறிப்பு::–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.470**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை குத்தகை தொகை செலுத்தாத காரணத்தினால் பின்வரும் விபரப்படி 6 நபர்கள் மீது கோபிசெட்டிபாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் –1 ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

| வ.எண் | வரி விதிப்பு எண் | குத்தகை இனத்தின் பெயர் | வழக்கு எண் | நிலுவை தொகை |
|---|---|---|---|---|
| 1 | 057/103 | வி.ராஜகோபால், பழைய பேருந்து நிலைய கடை எண். 04 | STC/235/2023 DATED 29/03/2023 | ரூ.63,972/- |
| 2 | 057/881 | பி.சரவணன், பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 65 | STC/236/2023 DATED 29/03/2023 | ரூ.69,019/- |
| 3 | 057/858 | எஸ்.பாலமுருகன், பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 42 | STC/237/2023 DATED 29/03/2023 | ரூ.75,643/- |
| 4 | 057/545 | எம்.எம்.பாலசுப்ரமணியம், IUDP- வாரச்சந்தை கடை எண். 16 | STC/238/2023 DATED 29/03/2023 | ரூ.71,062/- |
| 5 | 057/BD01 /00002 | சி.செல்வராஜ், பேருந்து நிலையத்தில் இஞ்சி மரப்பா விற்பனை செய்யும் உரிமம் | STC/239/2023 DATED 29/03/2023 | ரூ.1,35,000/- |
| 6 | 057/168 | கே.துரைசாமி, வாய்க்கால் ரோடு புதிய கடை எண். 03 | STC/240/2023 DATED 29/03/2023 | ரூ.55,230/- |
| | | | **மொத்தம்** | **ரூ.4,69,926/-** |

மேற்கண்ட விபரப்படி குத்தகை உரிமதாரர்கள் மீது வழக்கு தொடர நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்கள் தனது 05.04.2023 ந் தேதிய கடிதத்தில் வழக்கு கட்டணமாக ஒவ்வொரு வழக்குக்கும் தலா ரூ.4,000/- வீதம் மொத்தம் ரூ.24,000/- வழங்க கோரியுள்ளார். வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 19.04.2023 ந் தேதிய குறிப்பில், மேற்படி வழக்கு கட்டணம் ரூ.24,000/- மன்ற அனுமதி பெற்று, நகர்மன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கலாம் எனத்தெரிவித்துள்ளார்.

எனவே நகர்மன்ற வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுச்சாமி அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.24,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 678/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.471**

14. இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47/2023/A2 நாள்: 06.3.2023-ல் கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனம் 2022-2023-ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய நிர்வாக பங்குத்தொகை ரூ.1,25,000/- ஐ (ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும் ) கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2373/2022/சி1)

**அலுவலக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.472**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குசொந்தமான பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 08 ( வரிவிதிப்பு எண். 057/824) , திருமதி.என்.சண்முகவடிவு க/பெ. நடராஜன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சண்முகவடிவு என்பவர் இறந்து விட்டார். இந்நிலையில் திரு.சபியுல்லா த/பெ. சாகுல்அமீது என்பவர், மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை

தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக்கோரி, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மேற்படி வழக்கின் விசாரணை 24.04.2023 ம் தேதியன்று விசாரணைக்கு வர உள்ளதாகவும், சென்னை வழக்கறிஞர் திரு.AR.M.அருணாசலம், திருமதி.சங்கீதா அருணாசலம் அவர்கள் தங்களது 09.04.2023 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (கடிதம் வரப்பெற்ற நாள். 21.04.2023.)

வருவாய் ஆய்வர் அவர்கள், தனது 21.04.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் 24.04.2023 ம் தேதியன்று விசாரணைக்கு வரஉள்ளதால், வழக்கின் அவசர அவசியம் கருதி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராக, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நியமிக்கலாம் என தெரிவித்துள்ளார். அதன்படி நகர்மன்ற தலைவர் அவர்கள், வழக்கறிஞர்.திரு.பி.ஆனந்த் அவர்களை மேற்படி வழக்கு விசாரணையில் நகராட்சி சார்பாக ஆஜராக முன் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி, மேற்படி வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை நியமனம் செய்ததற்கு பின்னேற்பும், மேற்படி வழக்கின் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.( ந.க.எண். 0852/2023/அ3)

**அலுவலக குறிப்பு** : 1) மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

2) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. பின்னேற்பு வழங்கப்பட்டது**

**2. அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.473**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 3,4,5,7,9,10,11,12,13,15,23 மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 33552/2022/EA2–SWM–14 நாள்.10.01.2023 இன் படி இந்நகராட்சிக்கு தேவையான திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதன்மைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 001/2022/DO 1, நாள் : 01.02.2023 இன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 30.03.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 29.03.2023 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.03.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.649/– என்னும் விலைவிகிதத்திலேயே ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களுக்கு வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 11 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும்,

இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 649/- என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.17.91 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2914/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும்2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.474**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 24,25,28,29 மற்றும் 30 ஆகிய வார்டுகளில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.03.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 33552/2022/EA2-SWM-14 நாள்.10.01.2023 இன் படி இந்நகராட்சிக்கு தேவையான திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதன்மைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 001/2022/DO 1, நாள் : 01.02.2023 இன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 30.03.2023 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 29.03.2023 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.03.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.690/- என்னும் விலைவிகிதத்திலேயே ஒரு மாதகாலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 5 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/- என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.6.21 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2415/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது**
**3 ஏற்றுக்கொள்ளப்பட்டது, மன்றத்தீர்மான எண்.475**

18. கோபிச்செட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் இணைப்பு வரிவிதிப்புக்கான சொத்து வரிவிதிப்புகள் வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் இடிந்த பாலடைந்த கட்டிடங்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ள வரிவிதிப்பில் உள்ள குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்படாமல் கேட்பில் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது

மேற்படி நீக்கம் செய்யப்பட்டுள்ள சொத்துவரி இனங்கள் வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 5 எண்ணிக்கையில் மேற்கண்ட இனங்கள் படி பட்டியலில் உள்ளவாறு நிலுவை மற்றும் நடப்பு கேட்பில் பதிவேட்டில் வசூலிக்க இயலாத நிலுவைத்தொகை ரூ. 12096/– நடப்புத்தொகை ரூ. 5476/– ஆக மொத்தம் ரூ. 17568/– தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 118 –ன் கீழ் தள்ளுபடி செய்யவும், நிலுவை (ம) நடப்பு கேட்பில் இருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது (ந.க.எண்.00866/2023/இ2 )

**அலுவலகக்குறிப்பு** : நிலுவை ரூ.12096/– நடப்பு ரூ.5476/– ஆக மொத்தம் ரூ.17568/– தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –118 ன் கீழ் தள்ளுபடி செய்து நிலுவை (ம) நடப்பு கேட்பில் இருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.476**

19. இந்நகராட்சியில் 30 வார்டுகளிலும் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் தெரு நாய்களை முறைப்படிபிடித்து ABC Dog Rules 2001 ன் படி கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறி நாய் கடி தடுப்பூசி செலுத்தி நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பணியினை மேற்க்கொள்ளவும் , அதற்க்காகும் உத்தேச செலவினம் ரூ 5.00/– இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 2177 /2021/எச்1)

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2.இதற்காகும் செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது , மன்றத்தீர்மான எண்.477**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் வினியோகம் செங்கலரை கிராமம் தலைமை நீரேற்று நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. அங்கு ரா வாட்டர் மின் மோட்டர் 120 HP மற்றும் கிளியர் வாட்டர் மின் மோட்டார் 180 H.P திறன் இயக்கப்படுகிறது. ரா வாட்டர் ஆற்று தண்ணீர் சுத்தம் செய்வதற்கு 6 எண்ணிக்கை பில்டர் மீடியா உள்ளது. சுத்தம் செய்த குடிநீர் Chemical முறையில் சுத்திகரிப்பு செய்வதற்கு குளோரின் பிளான்ட் 2 எண்ணிக்கை உள்ளது.

Chlorine Liquid Gas சிலிண்டர் மூலம் பொருத்தப்பட்டு Pre Chlorinetion மற்றும் Post Chlorinetion முறையில் குளோரின் கலந்து நகர பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு தினம் பாதுகாப்பான குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. 20 நாள்கள் வீதம் 2 சிலிண்டர்கள் தேவைப்படுகிறது. வருடத்திற்கு 36 சிலிண்டர் தேவைப்படுகிறது. 2023–2024 ஆம் ஆண்டு

குளோரின் கேஸ் சிலிண்டர் வாங்குவதற்கு மதிப்பீடு ரூபாய் 9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிகள் குடிநீர் அவசியம் கருதி கொள்முதல் செய்யவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது , மன்றத்தீர்மான எண்.478**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 29 அண்ணா நகர் செல்லும் வழியில் உள்ள் பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்ட மின்மோட்டர் (Compresser_ மிகவும் பழமை வாய்ந்த நிலையில் உள்ளதால் தொடர்ந்து பழுதாகி வருகிறது.

எனவே, பொது மக்கள் நலன் கருதி பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்யும் பொருட்டு பழமை வாய்ந்த பழுதை நிவர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ள Compresser with motor யை மாற்றி புதிகாக Submersible Motor பொருத்தவும் அதன் குழாய் மற்றும் மின் உபகரணங்கள் மாற்றி அமைக்கவும், வார்டு எண் 8 எல்,ஜ,ஜி. காலனியில் உள்ள சிறுமின் விசைபம்பு தண்ணீர் தொட்டி (1000 லிட்டர் கொள்ளவு) பழுதடைந்துள்ளதால் அதை அகற்றி புதிய HDPE Tank அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.1,25,000/–ஆகும் அச்செலவின தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்

2.மேற்காண் செலவின தொகை ரூ.1,25,000/–னை நகராட்சி குடிநீர்

நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது , மன்றத்தீர்மான எண்.479**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி